175596

பெண் புத்தி மாலை

Y15L(1)?
N4t
175596

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# பெண் புத்தி மாலை.

இதனை

முன் அச்சிட்ட பிரதிக்கிணங்க

சென்னை - இட்டா,

**பார்த்தசாரதி நாயுடு ஸன்ஸ்**

சக்கரவர்த்தி பிரஸ்.

1946. [அணா 3.

தங்கசாலை தெரு, மதராஸ்.

Y15(Q)
N40

175596

பிஸ்மில்லா ஹிர்றஹ்மா னிர்றஹீம்.

# பெண்புத்திமாலை.

## காப்பு வெண்பா.

முன்னொளிவாய்ந்த முஹம்மது றசூல் நபியை
தன்னொளியினாலே சமைத்தானே—பின்னொளிர்மாற்
பெண்புத்திமாலைதனைப் பேசிடவேயெவ்வுயிர்க்குங்
கண்ணுற்று நிற்பவனே காப்பு.

## இதுவுமது.

பெண்புத்திமாலையெனப் பேசிடவே யெவ்வுயிர்க்கு
தன்புத்தியில்லாத் தையலரே—பெண்புத்தி
சொன்னார் முஹம்மதுசைன் தோகையரே கண்டறிந்தி
கெந்நாளும் வாழ்வீ ரிசைந்து.

## கண்ணிகள்.

அல்லா வொருவனை அஞ்சி வணங்கிக்கோ மயிலே
எல்லா மவனென் றிருதயத் தெண்ணிக்கோ குயிலே

மூமினோர் முத்து முஹம்மதைப் போற்றிக்கோ மயிலே எங்கள்
ஆமினார் பெற்ற அஹ்மதென் றெண்ணிக்கோ குயிலே

இல்லல்லா வென்றே இருதயம் பற்றிக்கோ மயிலே நபி
ஸல்லல்லா வென்று ஸலவாத்தை யோதிக்கோ குயிலே

காலைமுழித்துக் கணிவா யுளுக்கொள்ளு மயிலே இசை
மேலோன் றஹ்மத்து மேவ விறத்துவான் குயிலே

விதித்த பறுலுத்தம் வேண்டித் தொழுதுக்கோ மயிலே முன்
கதிக்க கலிமாவைக் கல்பினி லோதிக்கோ குயிலே

முப்பது நோன்பையுந் தப்பாமலேபிடி மயிலே நீ
துப்புர வாகவே ஹ-ப்பாய் நடக்கலாம் குயிலே

சகாத்தைச் செய்து ஸலவாத்தை ஓதடி மயிலே நா
சொர்க்கத்து வாழ்வுஞ் சுகம் பெறுவாயே குயிலே

பத்தா தனக்குப் பணிவிடை செய்யடி மயிலே முன்
கத்தா நபிமேற் கட்டுரை செய்தானே குயிலே



வெள்ளிக்கிழமை விடியமுழிக்கிக்கோ மயிலே தானம்
அன்னம் யவர்க்கன்னம் பகுந்து கொடுத்துக்கோ குயிலே

மாலை மகரிபில் மணிவிளக் கேற்றிக்கோ மயிலே இசை
மேலோன் வரிசைகள் வீட்டி லிறக்குவான் குயிலே

பட்டையுடுத்திப் பரிமளம் பூசிக்கோ மயிலே யின்பங்கள்
கட்டிய கொங்கைக்குக் கச்சு மிருக்கிக்கோ குயிலே

வார்ந்து முடித்து மணங்கள் பூசிக்கோ மயிலே நீ
சேர்ந்து புருஷனைச் சிந்தை மகிழ்ந்துக்கோ குயிலே

புருஷனுக்கிட்டுநீ போற்றிப்பின் னுண்ணடி மயிலே மெத்த
வரிசைகளான பரக்கத்துண்டாகுமே குயிலே

நாவைப் புரட்டி நகைப்போடு பேசாதே மயிலே நல்ல
பூவை முடித்தும் பிறர்மனை போகாதே குயிலே

கண்ணின் மையைக் கதிக்கவிடாதடி மயிலே அது
முன்னிலிருந்து முகத்தைப் பழிக்குமே குயிலே

வாசற்படி நின்று வார்ந்து முடிக்காதே மயிலே கெட்ட
தோஷத்தனமென்று தூதர் சொன்னாரடி குயிலே

உடுத்தாடை சிப்பை ஒருவர்க்கு மீயாதே மயிலே அதிற்
கொடுத்த இரணங் குறைத்த லுண்டாகுமே குயிலே

மக்ரிபு நேரத்தில் வாசற் பெருக்காதே மயிலே அது
பாலிலளந்த படியைக் குறைக்குமே குயிலே

துப்புர வில்லாமற் றேழனைச் சேராதே மயிலே அது
முப்பது வேதமொழிந்தவர் சொன்னாரே குயிலே

பூமியதிரவே பூண்டடி வையாதே மயிலே நல்ல
நேமித்த வாழ்வுன் நிறையுங்குறையுமே குயிலே

தூக்கம் பிடித்துடர் சோம்பித்திரியாதே மயிலே அது
ஏக்கம்பிடித்ததே இரணங்குறையுமே குயிலே

வம்பான பேச்சுகள் வாயிலெடுக்காதே மயிலே அதிற்
துன்பங்கள் வந்து தொடர்ந்துபிடிக்குமே குயிலே

கணவனைக் கண்டால் கடுகவெழுந்திரு மயிலே நல்ல
மனையாட்டி யென்றுன்னை வாழ்த்திக் கொள்வாரடி குயிலே

காலிக ளிட்டுக்களித்து நகையாதே மயிலே அது
தேவடியாட்கென்று செப்பிக்கொண்டாரடி குயிலே

கண்ணூ றுருக்கிக் கணவனைப் பாராதே மயிலே உன்னைப்
புண்ணாக்கி அட்டைப் பிடுங்க விடுவாரே குயிலே

எளியோரைக் கண்டாலிகழ்ச்சியாய்ப் பேசாதே மயிலே நாளை
பழிகாரி யென்றுன்னைப் பட்டோலைத் தீட்டுவார் குயிலே

பெருவிர லுற்றுநீ பேணி நடந்தாக்கால் மயிலே உன்னை
ஒருவனு செயற்று வந்தா லழிவானோ குயிலே
அஞ்சுமோ ராறு மகத்திற் றெளிந்துக்கோ மயிலே நல்ல
இன்சொல் முஹம்ம தீடேற்ற மாக்குவார் குயிலே
சற்குரு சொல்லைத் தவராமற் கொண்டுவா மயிலே நல்ல
சொர்க்க முனக்குண்டு தூயோன் சொன்னானடி குயிலே
பூனா மிட்டால் பிலுக்கித்திரியாதே மயிலே அது
நாணமற் கெட்ட நடத்தைகளல்லவோ குயிலே
மூக்காடு போட்டு முகமேற்பாராதே மயிலே கண்ணிற்
செக்காடுவா ரென்று செப்பினது பொய்யே குயிலே
நல்லாரை நாவில் நகைத்துப் பகையாதே மயிலே அது
பொல்லாங்கு வந்து பிழையாய் முடியுமே குயிலே
அன்னையை தந்தையை அன்பாய் வணங்கிக்கோ மயிலே இனிப்
பின்னை யுனக்குப் பெருநன்மை வேண்டுமோ குயிலே
அஞ்சிலே யொன்றை யறிவாற் றெரிந்துக்கோ மயிலே நீ
நெஞ்சிலே யொன்றை நினைக்குமின்னமே குயிலே
புருஷன் சொற்றட்டிப் புறம்பே போகாதே மயிலே நாளை
வரிசை நபிகள் மன்றாட மாட்டாரே குயிலே
புழுக்கைக ளென்றே யிழிவாகப் பேசாதே மயிலே நல்ல
ஒழுக்க மில்லாதவர்கள் புழுக்கைகளாவாரே குயிலே
பொய்யுந் திருடும் புறமும் விடுவாயே மயிலே நீ
மெய்யு மறிவும் விளங்கி யிருப்பாயே குயிலே
ஈயாத பாவி இருந்தென்ன போயென்ன மயிலே அந்தக்
காயா மரமெட்டிக் காய்த்தென்ன பூத்தென்ன குயிலே
எத்தீம்களோடே யெதிராடிக் கொள்ளாதே மயிலே நாளை
பத்தினி நாச்சியார் பாவியென்பாரடி குயிலே
கள்ளபுருஷனைக் கொள்ள நினைக்காதே மயிலே உன்னை
அள்ளற் கிடங்கி லழுந்தக் கவிழ்த்துவார் குயிலே
தலைவன் மொழியைநீ தட்டி நடந்தாக்கால் மயிலே நாளை
கொலைபாவி யென்றுன்னைக் குழியுள் நெருக்குமே குயிலே
ஆளனுக் குந்தனழகெலாங் காட்டிக்கோ மயிலே நாளை
வாழுமவ் வாள்வுக்கு வல்லோனுரைத்தானே குயிலே
துணைவி யருமையைத் துரோகி யறிவானோ மயிலே நாளை
கணவனருமையைக் கள்ளி யறிவாளோ குயிலே
ஏழைகுடி கெடுத்தோராக வாழலாம் மயிலே பின்னும்
நாளைக்கிருப்பது நாமறியோமடி குயிலே



சத்தியமென்று தலையிலடியாதே மயிலே அது
குற்றமதான கொலைவந்து சேருமே குயிலே
உப்பிட்டபேர்களை யுள்ளத்தி லெண்ணிக்கோ மயிலே நிறை
துப்பட்டி யிட்டுநீ சூதாகப் பாராதே குயிலே
தாயாரைப்போலச் சரியாய் நடந்தாக்கால் மயிலே நல்ல
நாயகமென்றிந்த நானிலஞ் சொல்லுமே குயிலே
தோளுந் தலையுந் திறந்து திரியாதே மயிலே நாளைத்
தேளுடன் பாம்புத் திகைக்கப் பிடுங்குமே குயிலே
திரேகங்க ளசையக் குலுங்கி நடக்காதே மயிலே நாளை
பங்க நரகில் பலீஹத்தி லாக்குவார் குயிலே
பாஷைகள் சொல்லிப் பகட்டித் திரியாதே மயிலே நாளை
வேசையர் சொல்லி மிரட்டுந் தொழிலடி குயிலே
மாயமருந்து மனதாரச் செய்யாதே மயிலே நாளை
நாய்ப்போற் கதறி நரகிற் றவிப்பாயே குயிலே
என்றைக்கிருந்தாலும் மண்ணுக்கிரையடி மயிலே கைப்
புண்ணுக்குக் கண்ணாடி போட்டெனப் பார்க்கேணும்குயிலே
வெள்ளை யுடுத்திக் கைவீசி நடக்காதே மயிலே பொல்லாக்
கள்ளியென் றுன்னைக் கலக்கப் படுத்துவார் குயிலே
மாறாட்டமாக மதிமோசஞ் செய்யாதே மயிலே மெத்தப்
போராட்டமான பிழைவந்து நேரிடும் குயிலே
கள்ளத் தனமும் ஹறாம் சினை வேதுக்கு மயிலே நான்
உள்ளத்தைச் சொன்னால் உடம்பெல்லாம் நோகுதே குயிலே
மணமிருக்க மறுமணம் வேண்டுமோ மயிலே சொந்தக்
கணவ னிருக்க ஹறாம்செய்ய வேண்டுமோ குயிலே
போரிட்டு வூரார் புறங்களைப் பேசாதே மயிலே அது
நீர்விட்டு இவ்விடம் நீயும் அலைவாயே குயிலே
ஜாலங்கள் பேசித் தூரமாய்த் திரியாதே மயிலே நாளைக்
[illegible] கொடூரங்கள் செய்வாரோ குயிலே
கொண்டோ னிருக்கக் குலைத்தானை வெட்டியாய் மயிலே அது
விண்டோ டத்தம் விழியி லடிப்பாரே குயிலே
பொன்னுக் கிசைந்து புரட்டுகள் செய்யாதே மயிலே அது
பினனுக் குனக்குப் பெரும்பிழை ரொம்பவே குயிலே
கற்றோர் சொல்லைக் கருத்தென் றறிந்துக்கோ மயிலே அருள்
பெற்றோர்க ளென்று பிரபல மாகுமே குயிலே
நேர்ந்த கடன்செய்ய நீ போகலாகாதே மயிலே போனால்
வேந்தன் லஃனத்து மேவி யிறக்குவான் குயிலே

கொட்டும் பிராமணர்க் கோலங்க ளேதுக்கு மயிலே நாளை ட
பொட்டிட வேண்டுமோ பொன்னின் குடத்திற்கு குயிலே
பெரியோர்கள் சொல்லை நீ பேணி நடவடி மயிலே அப்பால்
அறிய சுவர்க்க மழகும் பெறுவாயே குயிலே
தாய்சொல்லும் வார்த்தை தவறி நடந்தாக்கால் மயிலே நீ
நாய்போ லலறி நரகிற் கிடப்பாயே குயிலே
கோளுகள் சொல்லிக் குடியை கெடுக்காதே மயிலே நாளைப்
பாழு நரகிற் பாம்பு பிடுங்குமோ குயிலே
தாளாண்மைப் பேசித் தரையிற் கவிழாதே மயிலே நெடுங்
கோடாலிக் கொம்புக் குலத்துக்கே டல்லவோ குயிலே
வெறுத்துக் கணவனை வேறாக வெண்ணினால் மயிலே பூவில்
பருத்திப் படும்பாடு பட்டழிவாயடி குயிலே
பிசுமிக்கா விட்டு நீ மேலாய் இருந்துக்கோ மயிலே பொல்லாத்
துஷ்டமனெல்லாம் வெகு தூராகி நிற்குமே குயிலே
மாயங்க ளான மயக்கத்தைத் தள்ளடி மயிலே நல்ல
நாயகமென்ற நடத்தையைக் கொள்ளடி குயிலே
விண்ணுக் கழகாக வீசும் நிலாவெளி மயிலே நல்ல
பெண்ணுக் கழகுதான் பேசா திருப்பது குயிலே
வெள்ளியும் திங்களும் வீணிலழுகாதே மயிலே நாளைக்
கொள்ளி நரகிற் கொதிக்க அடிப்பிப்பார் குயிலே
அயலார் புருஷர்மே லாசை நீ வையாதே மயிலே பொல்லா
மெய்யான பேச்சுகள் வாயிலெடுக்காதே குயிலே
வாய் குற்றம் விட்டால் வரிசை யுனக்கடி மயிலே முத்து
மூக்குத்தி யிட்டால் முகத்துக் கழகடி குயிலே
உண்மையைச் சொல்லி யுலகத்தில் வாழடி மயிலே கெட்ட
தின்மைக ளெல்லாந் தீர்ந்தோடிப் போகுமே குயிலே
சுன்னத்து நோன்பு தொழுகை மறக்காதே மயிலே நல்ல
ஜன்னத்து வாசற் றிறந்து கொடுக்குமே குயிலே
பொல்லாத பேச்சுக்கும் போகவு மாகாதே மயிலே நீ
இல்லாத பேச்சை யெடுக்கவு மாகாதே குயிலே
பெரியோரைக் கண்டிடில் பேணி நடந்துக்கோ மயிலே நல்ல
அறிவாளர் வந்திடி லஞ்சிப் பணிந்துக்கோ குயிலே
பின்புத்தி யாலே நீ வெட்கத்தை விட்டாக்கால் மயிலே அது
பெண்புத்தி கொஞ்சமாய்ப் பேசிக்கொண்டாரடி குயிலே
கணவன் மொழிக்கு நீ கசடாகச் சொல்லாதே மயிலே நாளைப்
பிணமாய் நரகிற் புழுவாய்ப் புரளுவாய் குயிலே



வெளியில் முழுகவிரைந்தடி வையாதே மயிலே நாளைக்
குழியினிற் பாம்பு குழலிற் பிடுங்குமே குயிலே
கவரை யிடத்தி நீ கையைக் கொடுக்காதே மயிலே நாளைத்
துவரை யடித்தாற்போற் றூக்கி யடிப்பாரே குயிலே
மஞ்சள் குளித்து வருவார்முன் னில்லாதே மயிலே நீ
கொஞ்சிக் கணவனைக் கூடிக் குலாவிக்கோ குயிலே
கள்ள உறவாலுமிற் கடுஞ்சூலு மாவதேன மயிலே அந்தப்
பிள்ளையைத் தள்ளிப் பெரும்பாவங் கொள்வதேன் குயிலே
கருவை யறுத்தேயுருவங் கொலைத்தாக்கால் மயிலே உன்றன்
கரும நரகிற் சுடுவார் கெடுவாயே குயிலே
துன்பவலினுவிற் றுடர்ந்து சூலானையே மயிலே நாளை
ஒன்பது வாச லுதிரஞ்சீ ழோடுமே குயிலே
இரத்தமுஞ் சீழும் நெருப்பாக வாரியே மயிலே அப்போ
காத்தன் மலக்குகள் கதற வடிப்பாரே குயிலே
வாரிகொடுத்து மதிகெட்டு வந்திடில் மயிலே நாளை
ஓரிப்போல் வாய்விட்டுளரிக்கிடப்பாயே குயிலே
ஆகாத சொல்லை யறிவென் றெடுக்காதே மயிலே நீ தான்
போகாத விடத்துக்குப் போகவு மாகாதே குயிலே
அன்பாகப்பேசி அதனைக் கெடுக்காதே மயிலே நாளை
துன்ப நரகில் நாய்கிளறிப் பிடுங்குமே குயிலே
வட்டிகள் வாங்கி வயிறு வளர்க்காதே மயிலே நாளை
வெட்டிச் சதையை விழுங்க வடிப்பாரே குயிலே
ஆருக்கும் பொல்லா வரும்பிழை செய்யாதே மயிலே இந்தப்
பாருக்குள் உன்னைப்போற் பாக்கியரில்லையே குயிலே
ஆஷுரு நோன்பை அதாவாய்ப் பிடியடி மயிலே நாளை
வேசாற விட்டு நீ விஸ்தி பெறுவாயே குயிலே
நெஞ்சறியப் பொய்யை நிகரென்று சொல்லாதே மயிலே சூழ்ந்த
பஞ்சுபோ லீமான் பறந்து விடுமடி குயிலே
சோபத்து நோன்பைத் தொடர்ந்து பிடியடி மயிலே நாளை
ஆபத்துனக் ககன்றுபோய் நீங்குமே குயிலே
ஒக்கப் பிறந்தாரை வைதாரி கொள்ளாதே மயிலே அவர்
செக்குபோ லொக்கத் திரிந் தலைவாயே குயிலே
பெண்புத்தியாலே பிறர் முகம் பார்த்தாயே மயிலே நீ
தன்புத்தியாலே யல்லோ தாழ்வுபட் டாயடி குயிலே
அறிவாளர் சொல்லை அசடாக வெண்ணாதே மயிலே நல்ல
குறியாகக் கேட்டுக்குணமாய் நடந்துக்கோ குயிலே

அஞ்செழுத் துள்ளே யறிவேது சொல்லடி மயிலே அதைப்
பிஞ்செழுத் தாகவே பேசும் பிரானடி குயிலே

மெய் குருபாதம் விளம்பிப் பிடியடி மயிலே மற்ற
பொய்க் குருவைச்சேரில் பிழைதான் வருமடி குயிலே

வெறுத்தாக்கால் மூன்றுநாள் வீடுற வாடிக்கோ மயிலே அது
பொறுத் தரசாண்டதை புகழ்நபி சொன்னாரே குயிலே

ஊராரைப் பார்த்து நீ யுள்ள மெரியாதே மயிலே அது
வேரறவே கெடும் வசன மறிவாயோ குயிலே

உற்றாரைச் சேத்து நீ யுறவுங்கொண் டாடிக்கோ மயிலே மனம்
ஏத்தாலே வாளலா மொத்தாலே வாழலாங் குயிலே

உன்னாசை கொண்டே யுருகிக் கரைந்தாரே மயிலே அடி
என்னாசை யுன்னையு மேன்தான் கெடுத்தது குயிலே

கொண்டவனுக்கு நீ ரெண்டகம் பண்ணினால் மயிலே நீ
கண்டவனுக்கெல்லாம் பெண்டாயிருப்பாயே குயிலே

பொறுமை பருமையும் புத்தியும் தேடிக்கோ மயிலே கொடிய
வறுமை சிறுமை கவலையுந் தள்ளடி குயிலே

கூறும் பெரியோரைக் கூடிகொண்டாடிக்கோ மயிலே பூவால்
நாறுமணம் பெற்ற ஞாயமறியாயோ குயிலே

ஈன்றவர் சிந்தை யெரிய நீ பேசாதே மயிலே நாளைத்
தூண்டி லகப்பட்ட மீன்போலலைவாயே குயிலே

கலைப்பான பேச்சைக் கருத்தாக வெண்ணாதே மயிலே வேடன்
வலையிலகப்பட்ட மான்போல் விழிப்பாயே குயிலே

விதியினால் வாழுவார் மேதினியிலுள்ளவர் மயிலே நம்
மதியினால் வாழும் வல்லமை யில்லையே குயிலே

ஈமானை நெஞ்சி லிருதயம் பண்ணிக்கோ மயிலே நம்மை
சீமான் நபிபதஞ் சேர்ந்தல்லோ கொள்ளலாங் குயிலே

தீனெனும் வேதத்தை சிந்தையில் மறவாதே மயிலே நல்ல
வானகப் பெண்ணுடன் வாழ்ந் திருப்பாயே குயிலே

கர்த்தன் முஹம்மதைகண்டுகொண்டாடிக்கோ மயிலே நல்ல
சொர்க்கத்து ஹூறுல்யீன் தோழமையாகுவாய் குயிலே

ஆசைக்குத்தேடி யறிந்துதெரிந்துக்கோ மயிலே நல்ல
மாசக்கென்றுன்னை வகுத்து வைத்தானடி குயிலே

கர்த்தன் நபியைக் கனவிலு மறவாதே மயிலே நாளை
மூத்து முஹம்மது மோக்ஷத்திலாக்குவார் குயிலே

அகத்துக் கவலையை அப்புறந்தள்ளடி மயிலே உந்தன்
முகத்தினி லுள்ள முசிபத்து நீங்குமே குயிலே



பந்த மிருந்தாக்கால் பாக்கியமுண்டடி மயிலே நல்ல
சந்த மிருந்தாக்கால் சாதங்கிடைக்குமோ குயிலே

சூதைவிரும்பிச் சுகங்களைக் காட்டாதே மயிலே அது
பாதகமென்று பயகாம்பர் சொன்னாரே குயிலே

தீட்டாதே வாயினாற் றின்னாதே பாக்கிலை மயிலே தின்றால்
மீத்தவ னுந்தன் முகத்தை விட்டேகானே குயிலே

மாமிதனக்கு மரியாதை செய்யடி மயிலே உந்தன்
மாமோக வாசைக் கணவனைப் பெற்றாளே குயிலே

அஞ்சாக் தனிவழி நெஞ்சாரப் போகாதே மயிலே போனாற்
சஞ்சலப்பட்டுத் தணல்மெழு காவாயே குயிலே

முறிவினைப் பேசி முகத்தை முறியாதே மயிலே நாளை
இருதலைக்கொள்ளி யெறும்பு கடிந்துமே குயிலே

அனியாயங் கண்டு அரும்பிழை செய்யாதே மயிலே நாளை
அருமை குலைந்து ஆவேசங் கொள்வாயே குயிலே

பிள்ளையைத்திட்டிப் பெரும்பாவங்கொள்ளாதே மயிலே பின்னால்
உள்ளமகிழ்ந்து நீ ஊதாரியாவாயே குயிலே

மூக்காட்டுப் பெண்ணுக்கு மூக்கினிற் கோபமேன் மயிலே அது
மற்காட்டு மூந்தன் கணவனுக் காகாதே குயிலே

இசைராகங் கேட்டுநீ இன்பங்கொள்ளாதடி மயிலே நாளைக்
கசையால செப்பூசி காதிலிடுவாரே குயிலே

கட்டுங் கணவனை விட்டுப் பிரியாதே மயிலே விட்டால்
நட்டாற்றுக் கீரைபோற் கெட்டலைவாயடி குயிலே

உந்தன் கணவனுக்குச் சதிசெய்தால் மயிலே அவர்
வெந்து நரகில் விசனப்படுவாரே குயிலே

ஏழைப் புருஷனென் றெள்ளலாய்ப் பேசாதே மயிலே நாளை
வாளைக்கொண்டுன் னாவைவகிர்ந்து பிளப்பாரே குயிலே

குபிரான சாஸ்திரக் குறிவைத்துப்பாராதே மயிலே அதிற்
தவறாத ஈமான் கருதிப் பறக்குமே குயிலே

புறக்காணை நெஞ்சிற் பிழையாக வெண்ணாதே மயிலே எண்ணில்
ஒருகாலுநீ சொர்க்க முற்றிட மாட்டாயே குயிலே

பணங்களைத் தேடிநீ பாரிற் புதையாதே மயிலே நாளைப்
பிணந்தனிற் பாம்பு போட்டுப்புரட்டுமே குயிலே

சொக்கட்டான் சோழி சுகமென்றே யாடாதே மயிலே அது
இக்கட்டுப்போலே விடர்கூறதாகுமே குயிலே

நட்டினியாகவே கூட்டிக்கொடுக்காதே மயிலே நாளை
சட்டி நெருப்பாலே காச்சுப் பிடுங்குவாய் குயிலே

பத்தினி மாதரைப் பழிசொல்லுஞ் சொல்லாதே மயிலே — நீ
பெற்றிடும் பெண்ணுக்குப் பின்னர் குறைவரும் குயிலே

நிருமத் துள்ளானை நினைவில் வணங்கிக்கோ மயிலே — அதனால்
கியாமத்துனாள் நல்ல கீர்த்தி பெருகுவாய் குயிலே

புண்ணியஞ் செய்துநீ பூவினிற் வாழ்ந்தாக்கால் மயிலே — நீ
எண்ணின வெண்ணங்க ளெல்லாம் பலிக்குமே குயிலே

வீரியம் பாராட்டி மேனிபா ழாக்காதே மயிலே — நல்ல
காரியம் பாராட்டிற் காசினி போற்றுமே குயிலே

தொட்ட கணவனைத் தோசஞ் செய்யாதே மயிலே — நீ
குட்டம் பிடித்துக் குறைநோய்கள் கொள்வாயே குயிலே

உள்ளதைச் சொல்வாரை யூதாரி சொல்லாதே மயிலே — அது
பள்ளத்தில் வெள்ளம் பறந்தோடி நிற்காதே குயிலே

மூதாக்கள் செய்த முறைப்படி செய்துக்கோ மயிலே — அது
மாதாக்கள் செய்தது மக்களுக் கல்லவோ குயிலே

முனாபிக்கு சொல்லி முறுவினி கொள்ளாதே மயிலே — சொல்லி
பனாவாகி நீயும் படும்பாடு மெத்தவே குயிலே

மண்ணிற் பிறந்தாற்கு வல்லமை யில்லையே மயிலே — அதிற்
பெண்ணாய்ப் பிறந்தார்க்குப் பெருமையுமுண்டோ குயிலே

உண்மையைத்தேடு யொழுங்காய் நடந்தாக்கால் மயிலே — செய்த
நன்மையுந் தீமையுந் நாயனறிவானே குயிலே

பணத்துக்கோ ரம்புநீ பாரில் இசையாதே மயிலே — அவர்
இரணத்துக் கவிழ்தங் கொடுத்தாலுந் தீராதே குயிலே

பெண்ணாலே யாரும்பிரபலம் பேசுவார் மயிலே — அதில்
மண்ணும்பெண்ணென்று வகுத்தறியாயோ குயிலே

முரீதுகள் வாங்கி முடுக்கி லடுக்காதே மயிலே — அதைத்
தெரிந்துநீ சிந்தையிற் றேடக் கடனடி குயிலே

அஞ்சி லுதித்துநீ அஞ்ஞம்பிறந்தாயே மயிலே — அந்த
அஞ்சில் வளர்த்துநீ அஞ்சுமறியாயோ குயிலே

அலிபோடு லாமுட னருள் ஹேமீமுடன் மயிலே — நீ
மெலியாதே நாவில் விடுத்ததை விண்டுக்கோ குயிலே

கலிமாவை மூலக்கருத்தோ டிருத்தினால் மயிலே — அங்கே
புலிமாமனார் திருப்பொற்பதங் காண்பாயே குயிலே

அஞ்சையுங் கட்டி யறிவோடிருக்கினால் மயிலே — பொல்லா
வஞ்சனை போக்கி வாப்பாடு மாவாரே குயிலே

மூச்சுவிளைந்த மூலத்தைப்பாரடி மயிலே — அங்கே
பேச்சிவிளைந்த பிரபலங்காண்பாயே குயிலே


175596

மூலத்[illegible]மேலே முழுத்தா மரையடி மயிலே — அதில்
வலைப்பெண்ணான மனோன்மணி நிற்பாளே குயிலே

விண்ணோடியோடி வெளித்திரை நீங்கினால் மயிலே — கடற்
கண்ணாடிக் குள்ளொரு காரணங்காணுமே குயிலே

இருகண்ணை மாறி யிருதயம் பூட்டினால் மயிலே — அதிற்
சுரூபம் நடுவிற் றொடர்ந்து நின்றாடுமே குயிலே

முகத்துக் கண்ணை முருக்கித் திருத்தினால் மயிலே — உந்தன்
அகத்துக்கண்கீரி யறிவங்கே காண்பாயே குயிலே

இல்லல்லாஹு வென் றிருதயம் வைத்தாக்கால் மயிலே — இனி
அல்லாஹுத் தாரனுதினம் காண்பாயே குயிலே

செம்மலர்க் குள்ளே சிறந்தெட்டிப் பாரடி மயிலே — அங்கே
நன்மையாம் பாத்திமா நாயகம் நிற்பாரோ குயிலே

சத்தம் பிறந்த தலமெது சொல்லடி மயிலே — அது
பத்தி லிரண்டு பலகாணுங்காண்பாயே குயிலே

எனக்குள் நீயென்று உனக்குள்நானென்று மயிலே — அது
தனக்குட்டானாய்ச் சமைந்ததறியாயோ குயிலே

நினைவு மனமே நேராக நின்றாக்கால் மயிலே — கண்ட
கனவெல்லா முனக்குள் கைவசமாகுமே குயிலே

சற்றுமனது சருகாமல் நின்றாக்கால் மயிலே — அதில்
கர்த்தனும் வந்து கலந்தல்லோ பேசுவான் குயிலே

ஊனையொடுக்கி யொரு நினைவானாக்கால் மயிலே — நீயும்
காணாக்காட்சிகள் கண்டு மகிழ்வாயே குயிலே

இந்தப் பிறவி யிகழ்ந்துநீ பாரடி மயிலே — அந்த
சொந்தப்பிறவி துரந்தல்லோ தோன்றுங்காண் குயிலே

நித்திரை தள்ளி நினைவும் கனவாகும் மயிலே — பின்னும்
உற்றுமுழித்தே யுதித்ததார்சொல்லடி குயிலே

கனவிலுருக்கொண்ட காரணங்கேட்டாயோ மயிலே — நம்ம
நினைவிலும் நீரும் நினைக்காதிருந்தாக்கால் குயிலே

கண்டுநினைக்கக் கருத்துறப் போற்றினால் மயிலே — அருள்
உண்டு முனக்கிங் கிடையூறு வாராதே குயிலே

அறுசின்கீழ் நின்றே யறிவுநீ பாரடி மயிலே — நாயகன்
குறுசினிற் சத்தம்ஹூவென்று கேட்குமோ குயிலே

சத்தத்தைக்கேட்டுத் தயங்காமல் நில்லடி மயிலே — அங்கே
கர்த்தன் முஹம்மதை கல்புறக் காண்பாயே குயிலே

மேல்வாசி யேறி விளைந்ததலங் கண்டால் மயிலே — ஈராறு
கால்வாசி யேறிக் கணபதி சேர்வாயே குயிலே

சுழிமுனை யேறித்துருவங் கடந்தாக்கால் மயிலே ...ங்கே
வெளிக்கலைநாலும் விளையாடிநிற்குமே குயிலே

நாலுமொக்த நடுவை யறிந்தாக்கால் மயிலே நல்ல
பாலுங்குடித்துப் பாலுந் தெளிவாயே குயிலே

அற்ற விடத்தி லணுவும் நீயானக்கால் மயிலே நீ
உற்ற விடத்தி லொருவரு மில்லையே குயிலே

மாயப் பிறவி மயக்கத்தைத் தள்ளடி மயிலே நல்ல
காயாபுரி யுநதன் கைவசமாகும் குயிலே

மட்டத்துக்குள்ளே மதியைத் திருத்தடி மயிலே திரு
தட்டத்துக் குள்ளே மதிமகந் தோன்றுமே குயிலே

வெண்ணையைக் குவித்து விளக்கா லுருக்கினால் மயிலே அது
யுன்னை யல்லாம லொருவரு மில்லையே குயிலே

மேலோனும் நீயும் வினவித்தன தானால் மயிலே உயிர்
காலனார் வாங்கவுங் கட்டளை யில்லையே குயிலே

இளந்தைப் பருவத்தி லெண்ணித் தெரியவிட்டால் மயிலே பின்பு
தளர்ந்தப் பருவத்திற் றள்ளாடி நிற்பாயே குயிலே

வால வயதில் முரீதுகள் வேண்டிக்கோ மயிலே அதின்
காலமறிந்து கடவுளைத் தேடிக்கோ குயிலே

மாண்டிடும்போது முரீதுகள் தன்னையறியாவிட்டால் மயிலே அது
மக்க முஹம்மது மன்றாட்ட மில்லையே குயிலே

அங்க மிருக்கையி லெங்கு முலாவலாம் மயிலே தங்கள்
அங்க முடைந்தாக்காற் றங்குவ தெங்ஙனே குயிலே

மந்திரத்தாலு மெழுத்தாலு மாகுமே மயிலே இந்தத்
தந்திர பேச்சைத் தரையினிற் றள்ளடி குயிலே

மவுன மெழுத்து மனமுஞ் சரியிட்டால் மயிலே நீ
சுவனப் பதிக்கும் துரைத்தனப் பெண்ணடி குயிலே

பூதலந் தன்னிலே பொய்க்குரு வானவர் மயிலே இரு
காதையு மூடியே கண்ணைமே லேற்றுவார் குயிலே

உன்னைப்பிடிக்க வுபாய மறியாமல் மயிலே இரு
கண்ணைச் சிமிட்டிக் கடும்பார்வை காட்டுவார் குயிலே

மாடுபோ லுண்டு மயக்கமாய்த் தூங்குவார் மயிலே இது
கேடென் றவர்கள் கனவிலு மெண்ணாரே குயிலே

பழிந்துப் பெரியோரைப் பாராம லேசுவார் மயிலே அந்த
வெளிச்சத்தைக்காட்டுவேன்வீட்டிலேவாவென்பார் குயிலே

மிச்சமில்லாமற் குபாயங்க ளாகவே மயிலே அங்கை
பழிதகிடுஞ் செம்பொன் பறிக்கவே தேடுவார் குயிலே



சண்டாளப் பேரைச் சதமென் றெடுக்காதே மயிலே அவர்
பெண்டாள வுன்மேற் பிரியப்படுவாரே குயிலே

முரீது கொடுப்ப... ...றுன்று குணமுண்டு மயிலே அதை
தெரிந்தாரைப் பார்த்துத் திரு... ...க்கே குயிலே

இன்பங்கள் வந்த விதமென் றெடுக்கார்கள் மயிலே அவர்
துன்பங்கள் வந்தால் ஷுக்கூறு செய்வாரடி குயிலே

தானென்ற வாணவம் நாட்டிலே பேசாரே மயிலே எல்லாந்
தானென்று கொண்டவர் சற்குரு வல்லவோ குயிலே

வாக்கினிலொன்று மனதிலொன்றெண்ணாதே மயிலே நாளை
நாக்கினில் தூண்டுகள் நாட்டியே தூக்குவார் குயிலே

மனையிற் குறுஞ்செட்டு மக்களுக்காகவே மயிலே பொல்லா
வினையில் வருங்கேடு வேண்டவும் பேசாதே குயிலே

களரி விம்மையிற் கண்ணோரப் பாராதே மயிலே நாளை
குளரியே கண்களைக் கீறிபெடுப்பாரோ குயிலே

வீணாய பேச்சுக்கு வாணாளை மாய்க்காதே மயிலே கண்ணில்
காணாப் பிறைக்குநீ கைபேந்தி நில்லாதே குயிலே

சண்டைக ளிட்டுச் சபையினில் பேசாதே மயிலே அது
கொண்டவனுக்கறி வாண்மை குறையுமே குயிலே

இந்தாப் பிடியென றெடுத்துக் கொடுக்காதே மயிலே முன்னற்
சொந்தக் கணவனைத் தோற்றத் தறியாயோ குயிலே

சூலாகி மெத்தவுந் தூர நடக்காதே மயிலே செய்த
கூலி குறைத்துக் குறைவு கொள்ளாதே குயிலே

சற்குரு வானோரைச் சார்ந்து பணிந்தாக்கால் மயிலே அவர்
மெய்க்குரு வானவிட மல்லோ காண்பிப்பார் குயிலே

நல்லாரைச் சேர்ந்தாக்கால் நடக்கையும்நல்லதாம் மயிலே கெட்ட
பொல்லாரைச் சேர்ந்தாக்கால் புத்தியும் போகுமே குயிலே

விண்ணாகி மண்ணாகி வெளியு மொளியுமாகி மயிலே அது
அண்ணாகி இண்ணாகி பறலா யிருந்ததாம் குயிலே

தாயாகித் தமராகித் தங்கோர் பிறப்பாகி மயிலே பெற்ற
சேயா யுடலாய்ச் செகத்திற் பிறந்ததாம் குயிலே

மனந்தானே இந்தனை மகத்துவமானது மயிலே அந்த
இனந்தா னறியாமலேன் சும்மா பேசுகிறாய் குயிலே

நீருள்ள மட்டும் மீனங்கே துள்ளிடும் மயிலே சுத்த
நீரங்கே யற்றக்கால் மீனங்கே துள்ளுங்கான் குயிலே

மனமுள்ள மட்டுக்கும் வல்லமை பேசுவாய் மயிலே இந்த
மனமு மொடுங்கினால் நினைவெங் கிருக்குங்கான் குயிலே

மவுத்தைத் தடுக்குமுன் மவுத்தாகப் பாரடி மயிலை காலை
மவுத்தை மறந்தாக்கால் கைசேதப்படுவாரே குயிலை

பிரியுமுன் பிரிந்தா லோவிதம் வெளியா... ...மயிலை தன்னைத்
தெரியுமுன் ... ...தறுவ தெங்ஙனே குயிலை

கொஞ்சிய வாழ்வுங் குலாவும் பலனெல்லாம் மயிலை கெட்ட
வஞ்சிதன் றெண்ணியுன் பகுமன தாற்பார் குயிலை

பெண்ணாசை விட்டு நீ பேணி நடந்தாக்கால் மயிலை கெட்ட
கன்னாசு வந்தால் காலாலுதைப்பாயே குயிலை

இல்லல்லா தன்னை அகத்தி லறியாவிட்டால் மயிலை நீ
பொல்லா நரகிற் புகுவது மெய்யடி குயிலை

பார்த்து முரீதைப் பருவத்திற் றேடிக்கோ மயிலை நீ
நூற்றுக் கிருக்கவுஞ் சிட்டுமுண்டோ சொல்லுங் குயிலை

ஈரஞ்சு கூடு மிளந்தைப் பருவத்தில் மயிலை நீ
ஓரஞ்சு தேடி யுணக் கடனடி குயிலை

பூவிலே வாசம்பிறந்த விதமென்ன மயிலை கனி
மாவிலே யீமான் கலந்த விதமென்ன குயிலை

கல்லில் நெருப்புக் கலந்த விதமென்ன மயிலை இருள்
அல்லிற் பகலமைந்த விடமல்லோ குயிலை

தன்னை யறிந்து தரிபாட்டி லானக்கால் மயிலை அங்கே
சொன்ன வழியெல்லாஞ் சோதிபோற் றோணுமே குயிலை

மெத்த புசிப்பாலே மேனிச் சுகத்தாலே மயிலை மையல்
நித்திரை யாலே நினைவை மறந்தாயே குயிலை

நித்திரைபிட்டு நினைவோ டிருந்தால் மயிலை இறை
முத்தியைப் பெற்ற முஹம்மதைக் காணலாங் குயிலை

மூலப் பதியின் முளைத்த விதமென்ன மயிலை அது
வேலைப் பதியில் வெளிகண்டு தோற்றுமே குயிலை

தோற்று மொளிவை தொடர்ந்துநீ கண்டாக்கால் மயிலை சொல்லால்
வேற்றுமை யென்றும் வினைக்கவுமாட்டாயே குயிலை

முத்தொன்றி னாலே முழுதும் படைத்தானே மயிலை ஒரு
வித்தொன்றி னாலே வினவித் தெளியடி குயிலை

ஐயனெனு மட்கரங் கண்டு தெளியாவிட்டால் மயிலை சுடர்த்
துயிலெனுங் கண்ணாடி தோற்றவு மாட்டாதே குயிலை

குவிந்து விரிந்த உப்பை யறிந்தாக்கால் மயிலை முகம்
நிமிர்ந்து குடித்து தெரியும் பெருவாயே குயிலை

பூரண முண்டான பாதையைக் கண்டாக்கால் மயிலை வெகு
காரணங் கண்டுநீ காட்சி பெருவாயே குயிலை



சூதக முற்றிச்-சுபங் கடந்தாக்கால் மயிலை பின்னுஞ்
சூ...ச மூன்றாலே சோதித் தெரியுமே குயிலை

வண்டிக் கல்வி வெறிகொண்ட நாய்போலே மயிலை நீ
யுண்டலை இரத்தம் புசிக்கக் கொடுத்தாயே குயிலை

பேதை யமிர்தம் புசிக்கத் தெரியாமல் மயிலை நீ
சூதகமுண் டீமான் சுத்த மழந்தாயே குயிலை

பாதகர் சொல்லைப் பலனென்று கொள்ளாதே மயிலை பொல்லா
நாதங் குடித்து நரகி லமிழாதே குயிலை

உண்ணாகை நாக்கையுள்ளா புணர்ந்தாக்கால் மயிலை மதி
அண்ணாக்கி லூறு மமிர்தங் குடிப்பாயே குயிலை

பாலைக் குடித்தருள் பாக்கியம் பெற்றாக்கால் மயிலை நல்ல
வாலைப் பருவ வயதுனக் கில்லையோ குயிலை

மூளையைப் பற்றி நினைவு மயங்குமே மயிலை நீ
சூழவணைந்து துறந்துக்கோ ஞானத்தாற் குயிலை

ஊசியிற் காந்த முருகிப் பிடித்தார்போல் மயிலை நீ
தேசியைப்பற்றித் திரிலோகம் பாரடி குயிலை

மக்க முஹம்மது வாசனுக்குட் சென்றாக்கால் மயிலை கனக
சொர்க்க மருவூங் குருசுங் துலங்குமே குயிலை

அருகினில் மாயன் கொலுவங்கு தோன்றினால் மயிலை நல்ல
தெரிசனை கண்டு திருவடிப் போற்றிக்கோ குயிலை

முச்சந்திக் குள்ளே முனைப்பாரி விட்டாக்கால் மயிலை இறை
தற்சொரூபத்தை நீ சார்ந்துக் கொள்வாயடி குயிலை

கைவச மாகக் கருத்தோடு நாடியினால் மயிலை இனி
ஐவருமே கூடி யறிவு புரிவாரே குயிலை

சஞ்சலவாழ்வைச் சதமென்றிங் கெண்ணாதே மயிலை இது
கொஞ்சமென் றெண்ணிக்குருவை தெளிந்துக்கோ குயிலை

மக்களும் பெண்ணும் மனைவி யுடமையல் மயிலை நானைத்
தக்கமென் றெண்ணிநீ தன்னை மறந்தாயே குயிலை

திரியுஞ் சடத்தைத் தெண்டித்துப் பாராட்டாமல் மயிலை நாளைப்
பிரியும் பொழுதுமே பேதையாய் முழிப்பாயே குயிலை

மலீரிபத்தான வழிகண்டு நில்லடி மயிலை பொல்லாக்
கருமமெதல்லாங் கசடென்றே தள்ளடி குயிலை

புருட னிடத்திற் பெண்சாதிக்குச் சொர்க்கமே மயிலை இறை
அறுசிற் பெரியோ னருமத்திக்கோ தினான் குயிலை

பத்தா தனக்நப் பணிந்து நடந்துக்கோ மயிலை நெஞ்சிற்
கர்த்தன் முஹம்மதைக் கண்ணாலே காண்பாயே குயிலை

அஞ்சித் தெளிந்தே யறிவால் வணங்கினால் மயிலே நாளைக்
கொஞ்சியே சொர்க்கத்திற் கூடிக் குலாவலாங் குயிலே

நத்துங் கணவனுங் கேற்க நடந்தாக்கால் மயிலே நாளைக்
கர்த்தன் நபிமகள் காட்சி பெறுவாயே குயிலே

வழியோடறிந்து மகிழ்ந்து நடந்தாக்கால் மயிலே நீ
அழியாய்ப் பதியிலரசாண் டிருப்பாயே குயிலே

புத்திமா னைக்காலித்தனை போதாதோ மயிலே நீதான்
ஒத்து நடந்தாக்கா லித்தனை செல்வமேதன் குயிலே

பெண்புத்தி மாலையைப் பேணி நடந்தாக்கால் மயிலே நீ
விண்ணுற்று ஜென்னத்தில் வீற்றிருப் பாயடி குயிலே

அன்ன நடையாளே மின்னி னொளியாளே மயிலே நீ
எந்நாளுஞ் சொர்க்கத்தி லின்பமாய் வாழ்வாயே குயிலே

மங்களமாகவே எங்கள் முஹம்மது வாழி நல்ல
சங்கை நபிமகள் பாத்திமா நாயகம் வாழி

நாலியார் கூட நபிமார்கள் யாவரும் வாழி நல்ல
அலியார் பெற்ற ஹஸனு ஹுஸைனுமே வாழி

திங்க ளொளி மாருதீனுள்ள பேர்களும் வாழி மிக
பொங்கு பெரியவர் பூவையர் யாவரும் வாழி

பெண்புத்தி மாலையைப் பேசிப்படித்தோரும் வாழி நாளுங்
கண்ணுற்றுக் கண்டு கருத்தாய் நடந்தோரும் வாழி.

பெண்புத்திமாலை முற்றிற்று

---

175596

Q. H. M. S. No. 320. C. 3000 26-11-46.
ஸ்ரீ மகள் விலாசம் பிரஸ், ஜி. டி. சென்னை.